**SC. No.  69 /2020**

P.W.6 - **இளவரசன்**

தேதி:  04.10.2023

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார். (எதிரி ஆஜர்)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பைரா காலனியைச் சேர்ந்தவர் இல்லை என்றால் சரியல்ல. போலீசாரின் விசாரணையின் போது கீழ்புதுப்பேட்டை, காந்தி நகர், பைரா காலனி என்று சொல்லியுள்ளேன். நான் போலீஸ் விசாரணையின் போது கீழ் புதுப்பேட்டை, காந்தி நகர் என்று மட்டும் தான் சொல்லியுள்ளேன் என்றும் பைரா காலனி என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கும் எனது வீட்டிற்கும் சுமார் 100 மீட்டருக்கு மேல் இடைவெளி இருக்கும். நான் சம்பவ இடத்திற்கு அதிகாலை 5 மணிக்கு வந்தேன். போலீசார் காலை 11 மணியளவில் அங்கு வந்தார்கள். நான் அதிகாலை 5 மணியில் இருந்து காலை 11 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் என் வீட்டிற்கு போய் விட்டு வந்தேன். நான் சுமார் காலை 10 மணிக்கு என் வீட்டிற்கு போய் விட்டு வந்தேன். அ.சா.1 கண்ணன் காலை எத்தனை மணிக்கு வந்தார் என்று எனக்கு தெரியாது. அ.சா.1 கண்ணன் நான் போய் 1 மணி நேரம் கழித்து வந்திருப்பாரா என்றால் எனக்கு தெரியாது. கண்ணன் வந்து சுமார் 2 மணி நேரம் கழித்து போலீசார் அங்கு வந்தார்கள். சம்பவ இடத்திற்கு டி.எஸ்.பி அம்மா வந்தார்கள். அந்த சமயத்தில் சம்பவ இடத்தில் நிறைய நபர்கள் இருந்தார்கள். அந்த சமயத்தில் கிராம நிர்வாக அலுவலர் அங்கு வந்தாரா என்றால் எனக்கு தெரியாது. கிராம சிப்பந்தி இருந்தாரா என்று நான் பார்க்கவில்லை. அந்த சமயத்தில் தாசில்தார் அங்கு வந்தாரா என்று எனக்கு ஞாபகம் இல்லை. போலீசுக்கு தகவல் அ.சா.1 கண்ணன் சொன்னார். நானும் மார்கபந்து என்பவரும் நண்பர்கள் என்றால் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள். அ.சா.1 கண்ணன் வருவதற்கு முன்பு போலீசார் வந்தார்களா என்றால் இல்லை. பார்வை

மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. கைப்பற்றிய சேலை நீலக்கலரில் பூப்போட்டு இருந்தது. நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்கள் எழுதி வைத்திருந்த ஆவணத்தில் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பங்கள் போட்டேன் என்றால் சரியல்ல. நான் போலீசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH